www.padippakam.com

# நிஜங்கள்



பார்த்திபன்

படிப்பகம்

www.padippakam.com

## கதைகள்

1. நிஜங்கள்
2. குற்றமில்லாத கொலைகள்
3. ஒரே ஒரு ஊரிலே
4. உயரப் பறக்கும் பறவைகள்

கதைகளில் இடம் பெற்றுள்ள பெயர்கள் யாவும் கற்பனையே.

வெளியீடு - 1

www.padippakam.com

என்னுடைய பக்கங்கள்...

வணக்கம்! மீண்டும் புதிய சந்தித்துக் கொள்ளுகிறோம். பொது சனத் தொடர்பு சாதனங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. அவைகள் சரியான நோக்கில் சரியான முறையில் பயன்படுத்தினால் மிகப்பெரும்பேறாகும் அது மாபெரும் சேவையும், இலக்கியம் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பார். அது வெளிவரும் காலகட்டத்தின் சூழ்நிலையின் தாக்கங்கள் எழுத்துக்களாக வருவது தவிர்க்க முடியாததும் தவிர்க்கக் கூடாததுமாகும். எமது பாரம்பரிய பெருமைகள் கலைத் திரைத் திரையாய் இழப்புக்கள் நாடு இழப்பவர்கள் நாள் வருகைக்க இன்று பரிமாறப்படும் உபார்கள். சந்தர்ப்ப வசத்தாலும் வசதிகளாலும் நாம் இங்கே வந்துவிட்டாலும் நமது ரூச்சிகளை மறந்து எம்மை விலக்கிக் கொள்ளக் கூடாது எம்மாலான பங்களிப்புகளை நிச்சயம் செய்தே ஆகவேண்டும். அந்த வகையில் எழுத்துக்களை நான் தேர்ந்தெடுத்தேன். பொழுது போக்குக்காக மாயாஜாலக் கதைகளும் காதல் கதைகளும் எழுதப்பட்டு படிக்க வேண்டிய வேளை

www.padippakam.com

இருவர். நம்முடைய ஒவ்வொரு செய்கையும் எங்களுடன் மற்றவர்களுக்கும் சேர்ந்து பயனளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்தத் தொகுப்பில் உள்ளவற்றை வெறும் கதைகளாகப் படித்துவிட்டு மூடி வைக்காமல் நிஜங்களைப் புரிந்து கொண்டு நன்மை தரும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டால் அதுவே இந்த வெளியீட்டுக்குக் கிடைத்த மிகப் பெரிய லாபம். முகப்பு ஓவியம் வரைந்து தந்த, கிறுக்கல்களை கையெழுத்து மைப்பாக்கித் தந்தவர்களுக்கு என் நன்றிகள்!

இனி இணைந்து சிந்திப்போம்,

— பார்த்திபன் -

3/86

4 ஃப்றோபல் ஸ்ராஸ 34
5810 விற்றன்.
மேற்கு ஜேர்மனி.

FROBEL STR. 34.
5810 WITTEN.
W. GERMANY.

www.padippakam.com

# * நிஜங்கள் *

தீபாவளிப் பட்டாசுகள் போல் வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. எரிந்து கொண்டிருக்கும் வீடுகள், கடைகள், இவைகளிலிருந்து வெளிக்கிளம்பும் புகை சூழலை கருமையாக்கிக் கொண்டிருந்தது. அவல ஓலங்கள் தாளம் தப்பி வந்து கொண்டிருந்தன.

எல்லோருமே பரபரப்பாயிருந்தார்கள். அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். உயிரைக் காப்பாற்றும் ஆசை யாருக்கில்லை? மக்களிடையே ஆங்காங்கு நின்ற காக்கி உடைகள் தமிழர்களின் விதியை நிர்ணயித்துக் கொண்டிருந்தன.

தோமஸின் இதயமும் சூழலுக்கேற்ப மாறி இருந்தது. திரேசா குழந்தையை பாயிலிருந்து வாரியெடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். இறுக்கியபடி இன்னொரு மகள் ஓடிவந்து தாயின் சேலை முனையை பிடித்துக் கொண்டாள். தோமஸ் மற்ற இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்தான்.

தூரத்தில் வெடிச் சத்தங்களுடன் காக்கி உடைகள் வந்து கொண்டிருந்தன. "திரேசா சீக்கிரம்

www.padippakam.com

வா". தோமஸ் பாய்ந்தான். திரேசா கைக் குழந்தையுடன் ஓடி வர, பின்னால் இருமி சேலையைப் பிடித்தபடி இழுபட்டுக் கொண்டு வந்தாள். "ஓடு எல்லோரும் ஓடு" அவர்கள் வாருங்கள்......" தோமஸ் கத்தியபடி திரேசாவுக்குப் பக்கத்தில் நின்ற இருமியைத் தூக்கிக் கொண்டான். எல்லோரும் ஓடத் தொடங்கினார்கள். இடையிடையே சனங்கள் கூச்சல் போட்டபடி கலந்து ஓடினார்கள்.

"நாங்க எங்கேயப்பா போறம்" ஒருவன் கேட்ட கேள்விக்கு யாருமே பதில் சொல்லவில்லை. "எனக்குப் பயமமா இருக்கம்மா" என்றழுதான் மற்றவன். அந்த ஊர் தனது பாரங்களையும் உடமைகளையும் இழந்து கொண்டிருந்தது.

நீண்ட தூரம் ஓடி எல்லோரும் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்ட போது அவர்கள் நின்ற இடம் காட்டுப் பகுதியாகும். சுற்றிலும் மரங்கள். தாம் பாதுகாப்பான இடத்துக்கு வந்து சேர்ந்து கொண்டதாக நினைத்துக் கொண்டபின் எல்லோரும் தத்தமது இழப்புக்களை சொல்லி அழத் தொடங்கினார்கள்.

"என்ர புருஷனைக் கொண்டுபோட்டாங்கள்"

"பச்சைப் புள்ளையைச் சுட்டுப்போட்டாங்கள்"

"எல்லாமே போச்சு"

www.padippakam.com

தோமஸ் தனது உடம்பு அங்கத்தினை எண்ணிப் பார்த்தும் திடுக்கிட்டான். இரண்டாவது மகளைக் காணவில்லை. "அன்னா.. அன்னா". கத்தினான். அங்குமிங்கும் ஓடி ஓடித் தேடினான். திரேசா ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். மற்றப் பிள்ளைகள் மிரண்டு போய் அழுது கொண்டிருந்தன.

காட்டை கரிய இருள் அப்பத் தொடங்கியது. எவருமே வெளிச்சமாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. அழுது புலம்பியவர்கள் சக்தியற்று அப்படியே நிலத்தில் விழுந்து கிடந்தார்கள்.

திரேசா மடியில் குழந்தையைப் படுத்தி வைத்தபடி மரமொன்றில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். மற்ற இரண்டு பிள்ளைகளும் பக்கத்தில் படுத்திருந்தன. தோமஸ் பிள்ளையைத் தேடிப் போயிருந்தான். இன்னும் வரவில்லை. திரேசா கலக்கத்துடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்ணீர் கன்னத்தில் காய்ந்து போயிருந்தது.

இராப் பறவைகள், மிருகங்களின் சத்தங்கள் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டிருந்தன. கட்டில்....பாய் என்று வைத்தியசாலைப் படுத்தவர்கள் அந்த இரவை சமதரை முறையால் அநு . வித்துக் கொண்டிருந்தார்.

சூரியக் கதிர்கள் மரங்களினூடாக நிலத்தை முத்தமிட முயற்சித்துக் கொண்டிருக்கையில் காட்டுக்

www.padippakam.com

இன்றிருந்த மக்கள் பழையபடி பயப்பயந்தார்கள். தந்தமது மன உணர்ச்சிகளை வாய் வழியாக வெளியிட்டனர்.

" பிள்ளையள் கவனம் "

" புருஷனின் உடலையாவது கொண்டுவரப் போறாங்களோ.."

" தம்பி தப்பிச்சானோ....!"

திரேசா பிள்ளையைத் தேடிப் போன தோழமையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். யாருமே கட்டை வட்டு வெளியே போகத் துணிவார்களோ என்றெல்லாம் எதிர்பார்ப்பில் இருந்தார்கள். முடிவில் இரண்டு ஆண்கள் துணிந்து கட்டைவட்டுப் போனார்கள். மற்றவர்கள் துடிப்போடு காத்திருந்தார்கள். ஒவ்வொரு வினாடியும் யுகமாகக் கடந்து கொண்டிருந்தது. எல்லோருமே நிலை கொள்ளாதிருந்தார்கள்.

"அங்கை வருகினம்.." யாரோ கத்தினார்கள். எல்லோரும் அந்தத் திசையை நோக்கினார்கள். போன இருவரும் இரண்டு பேரைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு வந்தனர். கொண்டு வரப்பட்டவர்கள் யாரெனப் பார்க்க எல்லோரும் அவசரப்பட்டார்கள். அவர்களிருவரும் தரை மீது கிடத்தப்பட்டனர். ஒருவனின் தோளிலிருந்த இரத்தம் வடிந்து உறைந்து போயிருந்தது. மற்றவனின் நெற்றியில் இரத்தத்தால் தோ

www.padippakam.com

1 காணப்பட்டது. இருவரும் முனகியபடி இருந்தனர்.

"இவன் சரோஜாவின் புருஷன் சண்முகமல்லவோ...."

"சரோஜா குண்டுபட்டு செத்துப் போறாள்.... பாவம் பிள்ளைத் தாய்ச்சி மனிசி...."

"ஆ...... என்ரை தம்பி ஸ்ரீ...." ஒரு பெண் அழுதபடி ஓடி வந்து தோளில் காயம் பட்டவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். எல்லோர் கண்களும் கலங்கின.

"ஷெல்கள் ஓயத் திரியுது"... நாங்கள் பயத்திலை ஓடி வந்திட்டம். கண்டபடி சுட்டுக் கொண்டு போறாங்கள். உறவுக்கள் போனவர்கள் மாறி மாறிச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

"என்ரை புருஷனைக் கண்டியளோ...." திரேசா பயத்துடன் கேட்டாள்.

"அந்த தோமஸ் தானே.... பிள்ளையோடை கிடக்கான்.. கிடந்த போதே உயிர் இல்லை...."

திரேசா கதறி அழத் தொடங்கினாள். மற்றவர்களும் தமக்கு வேண்டியவர்களை விசாரிக்க உறவுக்குப் போனவர்கள் "இறந்தவர்கள் பட்டியலை" நீளமாக்கிக் கொண்டிருந்தார்கள். வாசல் அழுகை ஒலி பெரிதாகிக் கொண்டிருந்தது. நேரமும் போய்க் கொண்டிருந்தது.

பிள்ளைகள் எல்லாம் பசியை வாய்விட்டுச் சொல்லி

www.padippakam.com

அழுதன. பெரியவர்கள் மனதையும் வாயையும் கட்டுப் படுத்திக் கொண்டிருந்தனர். சிலர் கொதித்துக் கொண்டு இருந்தார்கள்.

திடீரென காட்டுள் பேரோசை இயந்திரங்களின் சத்தம் கேட்டது. "ஹெலிகப்டர்கள் பறக்கின்றன" ஒருவன் ஒருவன் கத்தினான். "சாப்பாட்டுப் பொட்டலங்கள் போடத் தான் வருகின்றன....." இன்னொருவன் சந்தோஷப்பட்டான். அவனுடைய ஆவல நீடிக்க விடாமல் ஹெலிகப்டர்கள் வந்த நோக்கத்தைச் செயல்படுத்தத் தொடங்கின.

பலத்த சத்தத்துடன் காட்டுக்குள் ஆங்காங்கே குண்டுகள் வெடித்துச் சிதறின. எரிபொருள் பசத்துடன் கலந்து இருந்தன. ஆகாயத்திலிருந்து தொடர்ந்து குண்டு மாரி பொழியப்பட்டுக் கொண்டிருந்தது. மரங்கள் தீப்பிடித்து எரியத் தொடங்கின. எதிரியுடன் நேருக்கு நேர் யுத்தம் போல இராணுவ பாணிகளை.... அகதிகளை...... அப்பாவி ஜனங்கள் மீது யுத்தம் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஹெலிகப்டர்கள் நீண்ட நேரத்தின் பின் அந்த இடத்தை விட்டு அகன்ற போது காட்டுக்குள் பெரிய சடலம் குவியல், சிதைந்த உடல்கள்.... மண் சேறு மண்ணாகி இருந்தன. சிலர் ஒரு வெள்ளத்தில்

படிப்பகம்

www.padippakam.com
முனகியபடி இருந்தாள். இப்பொழுது மாடிகளிலிருந்து புகை கிளம்பியபடி இருந்தது.

திரேசாவுக்கு தான் எங்கே நிற்கிறோம் என்ற நினைப்பே தெரியவில்லை. இருந்தது மாபெரும் அழிக்கப் பட்டிருந்தது. மற்ற இரண்டு பிள்ளைகளும் உடல் நடுங்க கத்தவும் திராணியின்றி தாயை ஒட்டியபடி நின்று கொண் டிருந்தனர். இனி எங்கே போவது..? என்ன செய்வது....? எல்லாமே கேள்விக்குறியாக இருந்தது.

அவசர கால நிலைமையின் கீழ் ஜேர்மனியின் படை பறிமுதல் செய்யப்பட்ட போது அவர்கள் தொழிலை இழ ந்தார்கள். வீட்டுச் சாமான்களை விற்று கிடைத்த பணத் தையும்.. நகைகளையும் உயிரை உடம்போடு ஒட்ட வைத்துக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்தோடு பெருமை யும் போனது. கணவனும் போய்விட்டான். ஒரு பிள்ளையும் போய்விட்டது. இன்னும் என்ன இழப்புகள் ஏற்பட வேண்டும்......

திரேசாவைப் போல புருஷனை இழந்தவர்கள்... சகோ தரனை இழந்தவர்கள்... பெற்றோரை இழந்தவர்கள்... பிள்ளை களைப் பறி கொடுத்தவர்கள்.. இவர்களுக்கு ஆறுதல்.....? உடைமைகளையும் உயிர்களையும் கண் முன்னாலேயே பறி கொடுக்கும் பயங்கரம்!......... தங்கள் சொந்த

www.padippakam.com

ந்து உயிரைத் துப்ப வைக்கக் கூட வழியில்லையே....

திலோகா கீழே உட்கார்ந்திருந்தாள். குழந்தை தாயிடம் பால் வாய் கேட்டுக் கொண்டிருந்தது. மற்ற இரண்டு பிள்ளைகளும் சுருண்டு படுத்திருந்தன.

ஆனாலும் யாருக்கும் தூக்கம் வரவில்லை.... துயரத்தைப் பகிர்ந்து கொள்ள எந்த ஜீவனுமில்லை... எல்லோருக்கும் அவரவர் உயிர் நிச்சயமில்லாதிருக்கையில் மற்றவரைக் கவனிக்கவா போகிறார்கள்....?

பொழுது போய்க் கொண்டிருந்தது. அவர்களிருந்த இடத்தில் இரவுக்கும் பகலுக்கும் அதிக வித்தியாசம் இருக்கவில்லை. தூறலாக ஆரம்பித்து மழை அதிகரிக்கத் தொடங்கியது. அவர்கள் எவரும் அதனைச் சட்டை செய்யவில்லை.

"எழும்புங்க.... எழும்புங்க..." சத்தத்துடன் அதிர்வும் உலுப்ப திலோகா கண்களைத் திறந்தாள். "எழும்புங்கோ... பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு வாங்கோ.." யாரோ சொன்னார்கள்.. திலோகாவுக்கு எல்லாமே மெல்லமாகத் தான் கேட்டது. முன்னால் நிற்பவர்களையும் சரியாக அடையாளம் காண முடியவில்லை.

யாரோ தொட்டெழுப்பினார்கள். தோள்களில் பிடித்துக் கூட்டிக் கொண்டு போனார்கள். நடக்கவே

www.padippakam.com

மையமாக இருந்தது. மார்பை இறுக்கிப் பார்த்தான். குழந்தை கழுத்தை இறுக்கிக் கட்டிப் பிடித்தபடி இருந்தது. பின்னாலே யாரோ இருவர் தூக்கி வருவது மங்கலாகத் தெரிந்தது.

நீண்ட தூரம் நடந்து காட்டுக்குள்ளால் வெளியே வந்ததும் கண்கள் வெளிச்சத்துக்கு கூசின. பாதையில் நின்ற உழவு யந்திரப் பெட்டி ஒன்றில் ஏறச் சொன்னார்கள். எல்லோரும் ஏறியதும் பயணம் தொடங்கியது.

பாடசாலை ஒன்றின் முன் வாகனம் நிற்பாட்டப் பட்டது. எல்லோரையும் இறங்கச் சொன்னார்கள். பாடசாலை முன்பாக வெளியால் கொடி கட்டப்பட்டு பல வண்ண உடுப்புக்கள் காயப் போடப்பட்டிருந்தன. உள்ளே ஒரே ஆரவாரமாக இருந்தது.

திரேசாவையும் பிள்ளைகளையும் உள்ளே அழைத்துப் போனார்கள். அது பாடசாலையின் வகுப்பறை ஒன்று. பெண்கள் கூடுதலாகவும் குழந்தைகள் வயோதிபர்கள் குறைவாகவுமிருந்தனர்.

திரேசாவும் பிள்ளைகளும் அந்த இடத்தில் விடப்பட்டு சில நிமிடங்களின் பின் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தட்டுச் சுற்றி வந்தது. சில விறகுகளோடு

www.padippakam.com

அவ்வளவையும் தீர்த்துவிட்டனர். பிள்ளைகள் ஏக்கத்துடன் திசையைப் பார்த்தன.

"இந்தத் தடங்கள் உங்களுக்குத் தான்.... பெண்பிள்ளைகளும் பிறகு தேவையாய் வரும் வச்சு நீங்கள் பாவிக்க வேணும்..." என இவன் சொல்லிவிட்டுப் போனான்.

கொஞ்ச நேரத்துக்குள்ளேயே திரேசாவும் பிள்ளைகளும் அங்கு முன்பே வந்தவர்களுடன் ஐக்கியமாகிப் போனார்கள். இழப்புக்களைப் பற்றிய துக்கங்கள் மறைக்கப்பட்டன. பிள்ளைகள் ஹெலிகொப்டர்கள் வந்து குண்டுகள் போட்டதை வெறும் கதை போல மற்றப் பிள்ளைகளுக்கு விபரித்துக் கொண்டிருந்தன.

இருந்தவர்கள் இல்லாதவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு இருந்த . அந்தப் பாடசாலைக்கு அகதி முகாம் என்ற பெயர் வைக்கப்பட்டிருந்தது. இருவேளையும் கஞ்சி குடித்தார்கள். தப்பி வந்து விழும் சோற்றை சாப்பிட்டார்கள். சில நாட்கள் மட்டும் மாப்பொருள் சாப்பாடு கிடைத்தது. போட்டிருந்த உடுப்புக்களைப் பாடசாலைக் கிணற்றின் உதவியுடன் தோய்த்துப் பாவித்தார்கள்.

அவர்கள் எல்லோரினதும் வாழ்க்கையும் அகதி முகாம் என்ற வட்டத்துக்குள் குறுகலாகிப் போனது.

பிள்ளைகள் வயதுக் கேற்ற துடிப்புகள் அடங்கி ஏக்கத்துடன் இருந்தன. குழந்தைகள் தாய்ப் பாசத்திற்காக தவம் செய்தன.

சில நாட்களில் வாந்தி பேதி பரவத் தொடங்கியது. குழந்தைகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கையில் ஒரே ஒரு மருத்துவர் வந்தார். மருத்துவம் நடந்து கொண்டிருக்கையில் இன்னும் கொஞ்சப் பேர் மரணித்தனர்.

கஷ்டங்களுக்கு எல்லோரும் பழகிப் போனார்கள். தற்போதைய வாழ்க்கைக் கேற்ப தம்மைப் பழக்கிப் படுத்திக் கொண்டனர். பாடசாலை வேலிக் குள்ளிருந்து வெளி உலகைப் பார்த்தார்கள். நாளைய பொழுதைப் பற்றி கவலைப்படாது சினிமா பார்க்கும், அட்டையடிக்கும் பந்து விளையாடும் மனிதர்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டார்கள். அவர்களில் எத்தனை பேர் தான் தப்பித்து இந்த மாதிரி இடங்களுக்கு வருவார்களோ.....

ஒரு நாள் திரேசாவின் குழந்தை கையில் கிழிந்த பத்திரிகைத் துண்டு ஒன்றுடன் வந்தான். திரேசா அதை வாங்கிப் பார்த்தாள். வெளிநாடுகளில் அகதிகளாக வந்திருப்பவர்களைத் திருப்பி அனுப்புங்கள்... அவர்களுக்கு நாங்கள் பாதுகாப்பு அளிக்கின்றோம் என்று நாட்டின் ஜனாதிபதி விட்ட அறிக்கை இருந்தது. திரேசாவுக்கு

www.padippakam.com

அந்த நேரத்திலும் சிரிப்பு வந்தது.

"வெளி நாடுகளுக்கும் அகதிகள் போயிருக்கிறார்களா....?" சிறுவன் கேட்டான். திரேசா பதில் சொல்லவில்லை. "அவர்கள் எல்லோரும் பணமிருந்தோர் அகதிகள்...." அகதி முகாம் இளைஞன் ஒருவன் சொன்னான். சிறுவனுக்கு உண்மையில் யார் அகதிகள் என்று புரியவில்லை...



படிப்பகம்

www.padippakam.com

# குற்றமில்லாத செல்வங்கள்

மணியொலியைத் தொடர்ந்து பாடசாலையிலிருந்து வெளிவந்த மாணவர்கள் பாதையில் பரவினர். எங்கும் ஒரே வெள்ளை. வெளித் தோற்றத்தில் எந்தவித பாரபட்சமுமில்லாமல் மாணவர்கள் என்ற முத்திரையால் எல்லோரும் சமனாக இருந்தார்கள். எட்டு மணித்தியாலங்களாக சிறைப்பட்டிருந்ததைப் போல் ஆரவாரித்துச் சந்தோசித்தார்கள்.

வாகனங்கள் தமது வேகத்தைக் குறைத்து மெதுவாக நகர்ந்து போக வேண்டியதாயிற்று. பொறுமை இல்லாத சாரதிகள் வெளியே எட்டிப் பார்த்துக் கத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் தம் பிள்ளைகள் இல்லை என்ற துணிவில் அவர் கூட்டத்தூடாக வாகனத்தைச் செலுத்தினார்.

மேனகாவும் சங்கரியும் அருகருகே நடந்து வந்தனர். சிநேகிதிகள் என்றாலும் தகுதியிலிருந்து இருவரிடையேயும் வித்தியாசம் இருந்தது.

"மேனகா! இண்டைக்குச் சாப்பாடு என்னடி?"

www.padippakam.com

சங்கர் கேட்டான்.

"பசியாயில்லையே" மனோகர் அருகப் பதிலளித்தான்.

"பசியாயில்லையா..? நேருக பாண் தான் சாப்பாடா..? எனக்கு மற்றவர்களுடன் இருந்து சாப்பிட வெட்கமாக இருக்கு...."

"அப்ப இனி மேல் சாப்பிடாதை...."

"பசிக்குமா..... மற்றவர்களைப் பார்க்கிறதில்லையா... எப்படி எப்படி சாப்பாடு கொண்டு வாறாங்கள் என்டு..."

"பார்த்திருக்கிறேனே... வீட்டுக் கஷ்டத்தில் சாப்பாடு கொண்டு வர முடியாமல்... அதை வெளிப்படுத்தவும் முடியாமல் மைதானத்தில் போய் நின்று விளையாடுபவர்களையும் பார்த்திருக்கிறேன்."

மனோகரின் இந்தப் பதிலுக்குப் பின் சங்கர் எதுவுமே சொல்லவில்லை.

அவரவர் தம் வீடுகளுக்குச் செல்ல மாணவரின் கூட்டம் குறைந்து நாலைந்து பேரே நடந்து கொண்டிருந்தார்கள்.

சூரியன் மெல்ல நேரம் முடிந்து மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அவன்

www.padippakam.com

வெற்றுடம்பாய் கடலில் நீராடப் போகும் காட்சி யை நினைத்துப் பார்த்து வானம் வெட்கிச் சிவந்தது.

மனோகரியும் சிவகாமியும் மௌனமாக வீட்டுள் நுழைந்து பாடப்புத்தகங்களை வைத்துவிட்டு உடையை மாற்றி முகம் கழுவிக் கொண்டு கூடத்தில் வந்து உட்கார்ந்தனர். பார்வதி - இருவருக்கும் அம்மா - இருவ ருக்கும் தேநீர் கொண்டுவந்து கொடுத்து விட்டுப் புறப்படத் தயாரானாள்.

"இவருக்குப் பட்டு ரவிக்கையாம்... தயார் பண்ணி வைச்சிருக்கேன் நான் போயிட்டு வாறேன்..." பார்வதி சொல்லிவிட்டுக் கையில் சில புத்தகங்களுடன் வெளி யே போனாள்.

பார்வதி இரவு நேரங்களில் சின்னப் பிள்ளைக ளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து கொஞ்சம் சம்பாதித்தாள். அந்த உழைப்புடன் அவளுடைய ஓய்வூதியப் பணமும் சேர்ந்து தான் அந்தக் குடும் பத்தின் தேவைகளை நிவர்த்தி செய்ய முயன்று கொண்டிருந்தது.

பார்வதியின் கணவன் கொழும்பில் பிறந்து வளர்ந்து கடை வைத்திருந்தவன்... இனக்கலவரத் தின் போது அகால மரணமானான். கொலை வெறியர்

www.padippakam.com

காரின் இந்தச் செய்கை அந்தக் குடும்பம் அதன் துணையை இழந்தது.

மத்திய தரக் குடும்பத்திற்குக் கொஞ்சம் கீழா கவும் ஏழைக் குடும்பங்களுக்குக் கொஞ்சம் மேலா கவும் பொருளாதார வசதிகள் இருந்தாலும் தனது இர ண்டு பெண்களையும் படிக்க வைப்பதில் தீவிரமாக முனைந்து கொண்டிருந்தாள் பார்வதி. பிள்ளைகளும் இத் தனையாகப் படித்தார்கள்.

மனோகரி உயர்தர வகுப்பிலும், சங்கரி 10ம் வகுப்பிலுமாக படித்துக் கொண்டிருந்தார்கள். இரு வருமே படிப்பில் கெட்டிக் காரர்கள். மனோகரி கு டும்பத்தை உணர்ந்தவள்... பொறுப்பாக நடந்து கொள் வாள். சங்கரி கொஞ்சம் விளையாட்டுத்தனம்.. அழ கில் இருவருமே அதிக மதிப் பெண்களைப் பெற்றி ருந்தனர்.

“நீ... புட்டு அக்கா.. எனக்கு எழுத்து வேலை கொஞ்சம் இருக்கு....” சங்கரி சொல்லிக் கொண் டே தனது அறைக்குள் புகுந்து கொண்டாள்.

தங்கை நழுவுவதைப் புரிந்து கொண்டாலும் அவளைத் தொந்தரவு செய்யாமல் தானே சமையல் செய்யத் தொடங்கினாள் மனோகரி.

படிப்பகம்

www.padippakam.com

அந்த வகுப்பறையில் ஆசிரியர் இல்லாமல் மாணவர்கள் மட்டுமே இருந்தார்கள். ஆசிரியர் அன்று பாடசாலைக்கே வரவில்லை. மாணவர்கள் சப்தமிட்டவாறு வெவ்வேறு கவனங்களில் இருந்தார்கள்.

மாணவிகளைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தனர். பாடப் புத்தகங்களுக்குள் கதைப் புத்தகங்கள் வைத்துப் படித்தார்கள். சினிமா நடிக நடிகைகளை விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். சிலர் உண்மையாகவே பாடத்தைப் படித்தார்கள்.

"என்னடா... அங்கேயே பார்த்துக் கொண்டிருக்கிறாய்....?" ராகவன் நாதனின் தோளில் தட்டிக் கேட்டான்.

"ஒன்றுமில்லை..." சுருக்கமாகச் சொன்ன நாதன் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு தானாகவே சொன்னான். "மனோகரி நல்ல அழகு..."

"ஓஹோ... கதை அப்பிடிப் போகுதோ..." ராகவன் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் விசயத்தைச் சொல்ல மற்றவர்களும் பெரிய நகைச்சுவையைக் கேட்டது போலச் சிரித்தார்கள்.

நாதனின் தந்தை யாழ்ப்பாணத்தில் பெரிய புடவைக் கடை வைத்திருந்தார். நாதன் ஒரே

www.padippakam.com

மகன். செல்லமாக வளர்ப்பதாக நினைத்து மகன் கெட்டுப் போகக் காரணமாக வாய்ப்புகளித்தார். அவருக்கிருப்பது போலவே நாதனின் நாகரீக செயல்களை எதிர்பார்த்து அவனுக்குப் பெரிய ஒரு கூட்டமே இருந்தது. திருட்டுத் தனமாக கொட்டுப்பார்கள். பசுவின் பக்கத்தில் நின்று கள்ளக் குடித்தார்கள். சைக்கிளில் ஊர்வலம் வருவார்கள். பெண்களுடன் சேட்டை விடுவார்கள்.

"இப்படிச் சுதந்திரம் போட்டால் இந்த ஊரைப் படிப்பிக்க முடியாது..." பக்கத்து பங்குப் பாதிரியார் வந்து சொன்னதும் அந்த வீட்டில் அமைதி நிலவியது. எல்லோரும் புத்தகங்களை எடுத்து கடமைக்காகவோ படிப்பதற்காகவோ சும்மாகவோ விரித்து வைத்தார்கள்.

நாதனின் கண்கள் மட்டும் அழகிய மனோகரியின் மேல் பதிந்து கொண்டிருந்தது.

* * * * *

இருள் அப்போது தான் பரவத் தொடங்கியது. இரண்டொரு தெருவிளக்குகள் மட்டும் தத்தமது கடமைகளைச் செய்து கொண்டிருந்தன. பஸ் ஒன்று நின்று போக வேலை முடிந்து வந்தவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

அதிலிருந்து இறங்கி நின்றார்கள்.

மனோகர் சாமான்களை வாங்கிக் கொண்டு கடையிலிருந்து வெளியே வந்தான். பார்வதி புருஷனோடு ஊருக்குப் போயிருந்ததால் மனோகர் இனித்தான் போய் சமையல் செய்ய வேண்டும். அத்துடன் பாடங்களுக்கான எழுத்து வேலைகள் அவனுக்கு நிறைய இருந்தன.

பாதையில் அவ்வளவாக நடமாட்டம் இல்லை. மனோகர் வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

திடீரென்று பின்னாலிருந்து சத்தம் கேட்டது. மனோகர் திரும்பிப் பார்த்தான். இவன் திரும்பியதும் ஒற்றைக் காலைத் தரையில் ஊன்றிக் கொண்டு சைக்கிளிலிருந்த நாதன் பற்கள் யாவற்றையும் காட்டிச் சிரித்தான்.

மனோகர் எதுவும் பேசாமல் தொடர்ந்து நடந்தான். கொஞ்சத் தூரம் சென்றதும் மீண்டும் மிக அருகாகச் சத்தம் கேட்டது. மனோகர் திரும்பினான். கையில் ஒரு காகிதத் துண்டை நீட்டியபடி நாதன் நின்றான்.

"என்ன இது...?" மனோகர் சந்தேகத்தோடு கேட்டான்.

"படித்துப் பாருங்கள் புரியும்..." நாதன் சிரிப்

படிப்பகம்

போட்டு சொன்னதை மனோகரிக்குப் பழக்காமலேயே புரிந்துவிட்டது.

தலையை வெடுக்கென்று திருப்பிக் கொண்டு வேகமாக நடந்தாள் மனோகரி. தொடர்ந்தும் பின்னால் சிரிப்புக் கேட்டபோதும் அவள் திரும்பிப் பார்க்கவேயில்லை.

படபடப்புடன் வீட்டு வாசல் கதவரை சென்று கதவைத் தட்டிவிட்டுத் திரும்பிப் பார்த்த போது தூரத்தில் பாதையோரமாக நாதன் சைக்கிளோடு நிற்பது தெரிந்தது.

* * * * *

வரிசையாக வாசிகசாலையிலிருந்து புறப்பட்டு வகுப்பறைக்கு எல்லோரும் வந்தார்கள்.

அந்தப் பாட நேரத்துக்குரிய ஆசிரியர் வந்ததும் எழுந்து நின்று மரியாதை வணக்கம் செலுத்தி விட்டு அமர்ந்தார்கள்.

மனோகரி அந்தப் பாடத்துக்கான கொப்பியை எடுத்து விரித்த போது உள்ளேயிருந்த காகிதத் துண்டு ஒன்று கண்ணில் பட்டது.

வியப்போடு அதை எடுத்து விரித்துப்

பார்த்தாள். 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்ப தன் ஆங்கிலப் பதத் தொடர் எழுதப்பட்டு நாதன் என்று கையொப்பமிடப்பட்டிருந்தது.

மனோகரிக்கு குப்பென்று வியர்த்தது. கோபத்தால் முகம் சிவந்தது. அவனுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்.....

கடிதத்தைக் கிழிக்கையில் யாரேனும் பார்த்து விடுவார்களோ என்ற பயத்தில் அதை எடுத்து இன்னொரு நோட்புக்கில் வைத்தாள்.

பல்லைக் கடித்துக் கொண்டு தலையைத் திருப்பிப் பார்த்தாள். நாதன் தலையைக் குனிந்து கொண்டு ஓரக் கண்ணால் இவளைப் பார்ப்பது தெரிந்தது. மனோகரி எதுவும் செய்ய முடியாமல் பாடத்தைக் கவனித்தாள். இவளுடைய செய்கைகளைப் பக்கத்துக் கதிரையிலிருந்த ராணி கவனித்துக் கொண்டேயிருந்தாள்.

ஆசிரியர் தான் நடாத்திய பாடத்தில் கேள்விகள் கொடுத்தார். விடைகளை எழுதிக் கொண்டு வந்து தனக்குக் காட்டும்படி பணித்தார்.

எல்லோரும் அதில் சிரத்தையாக இருந்தார்கள். மனோகரி ஏனோ தானோ என்று பதில்களை எழுதி எழுந்து போய் ஆசிரியருக்குக் காண்பி

www.padippakam.com

த்தான்.

இந்த நேரத்தில் ராணி மனோகரியின் கைப் பையைத் திறந்து அதிலிருந்த அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துவிட்டு அப்படியே வைத்து விட் டான்.

மனோகரி மீண்டும் வந்து இருக்கையில் அமர்ந்தாள். அவள் மனம் படபடத்துக் கொண்டிருந்தது. மதிய போசன இடைவேளையின் போது, அங்கே யாருமில்லாத போது கடிதத்தைக் கிழித்து எறிந் தாள். அதன் பின் தான் நிம்மதியடைந்தாள்.

* * * * *

"படம் எப்படி...?" சங்கரி தான் கேட்டாள்.. மனோகரி யும் அவளும் பக்கத்து வீட்டார் வீடியோவில் 'தூவம்' படம் பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்தார்கள்.

"எனக்குப் பிடிக்கலே...." மனோகரி பதிலளித் தாள்.

"ஏன்...? கெடுக்கப்பட்ட அந்தக் கதாநாயகி எப்படி ஆண் வர்க்கத்தைச் சாடுகிறாள்... எப்படி யெல்லாம் அவர்களைப் பழி தீர்க்கிறாள்... அத்த னையும் அபாரம்... இதுவரை எந்தத் திரைப்பட

www.padippakam.com

ம்ம் வெளிவரவில்லை...

"படத்தின் ஆரம்பமே எனக்குப் பிடிக்கவில்லை....

காதல் என்பதே வெறும் அழுகைச் சீரியல் வருவது

தான். அந்தந்த வயதுகளுக்கேற்ப கொஞ்சம் இதை

சேர்ந்து கொள்கின்றன. அவசரமாக ஏற்படும்

காதலில் எல்லாமே அவசரமாக நடந்து முடிந்து

விடுகின்றன. முழுதும் சோகம் தான்..."

"அப்போ பெற்றோர்கள் நடத்தி வைக்கிற கல்

யாணம் தான் உண்மையானது... இருந்து.. என்

கிறீர்களா...?"

"அப்படியில்லை.. அப்படிப்பட்ட திருமணங்களி

லும் குறைகள் இருக்கலாம். ஆனால் வெறும் பாவனை

காதல் வெறும் உடல் கவர்ச்சி ஒன்றிய மண

மொத்தத்தில்."

"அப்படியானால் நமக்கு இதை காதல் எல்லாம்

வெறும் கவர்ச்சியினால் வந்தது தானா....."

"இதுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது..

யோசிப்பதற்கு இதை விட வேறு விஷயமே

இல்லையா.... பேசாமல் வா" பேச்சை முடி

த்து வைத்தான்.

இருவரும் விடுதியை நோக்கி சென்றனர். பார்வதி

www.padippakam.com

பாடசம்பந்தமான வினாவிடைகள் தயாரித்துக் கொண்டிருந்தாள். சகோதரிகள் இருவரும் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டனர்.

படுத்திருக்கும் நேரத்தில் மீண்டும் சங்கரி ஆரம்பித்தாள்.

"இந்தப் படத்தில் கதாநாயகி பல ஆண்களால் வஞ்சிக்கப்பட்டாலும் தன் மகளைப் பெரியவளாக வளர்க்க வேண்டும் என்ற வெறிக்காக தன் உடலை விற்கிறாளே.. பரிதாபம்.."

"இதில் என்ன பரிதாபம்... அப்படிப்பட்ட தொழிலால் வரும் காசில் பிள்ளையை வளர்ப்பதை விட இருவரும் நஞ்சு குடித்துச் செத்திருக்கலாம்......" பார்வதி தான் சொன்னாள்.

பட விமர்சனங்கள் தொடர்ந்து கொண்டிருக்கையில் நிலவு மேகத்துள் மறைந்து கொண்டிருந்தது.

* * * * *

இளம் வெய்யில் பரவியிருந்தது. பறவைகள் கீச்சிட்டுப் பறந்து கொண்டிருந்தன. அன்றைய அலுவல்களைக் கவனிக்க எல்லோரும் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

மனோகர் சீக்கிரமே பாடசாலைக்கு வந்து விட்டான். அவனுடைய வகுப்பறையில் ஒருவரும் வரவில்லை. மற்றைய வகுப்பறைகளில் ஐந்தாறு பேர்களே இருந்தார்கள். பாடசாலை ஆரம்பிக்க 30 நிமிடங்கள் இருந்தன.

மனோகர் தனது வகுப்பறையைச் சுத்தம் செய்தான். கதிரை மேசைகளை ஒழுங்குபடுத்தினான். ஒரு கொப்பியை எடுத்து படிக்க நினைக்கையில் நாதன் வகுப்பறைக்குள் வந்தான்.

மனோகர் அவனைக் கவனியாதவன் போல் கொப்பியை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். நாதன் அவனை நோக்கியே வந்தான்.

"என் கடிதம் படிச்சீங்களா....."

"........"

"பதிலே தரவில்லையே....?"

"........"

"சரியான வெட்கம் போல..."

"சீ.... பள்ளிக்கூடத்தில இருக்கைக்கை மாணவன் மாதிரி நடந்து கொள்... இனியும் என்னோடை கதைக்காதை..." மனோகர் படபடவென கொட்டித் தீர்த்தான்.

www.padippakam.com

நாதன் அதைத் திருத்தியவுடன் அதையும் பெரிய திருப்பி நடக்கையில் ராணி வரவேற்பறைக்குள் வந்து கொண்டிருந்தாள்.

★ ★ ★ ★ ★

ஹர்த்தால்... பகிஷ்கரிப்புக் காரணமாக பாடசாலை மூடப்பட்டிருந்ததால் மனோகரியும் சங்கரியும் வீட்டிலேயே இருந்தார்கள்.

மனோகரி பார்வதிக்கு சமையலில் உதவி செய்து கொண்டிருக்க சங்கரி வீட்டைச் சுத்தப் படுத்திக் கொண்டிருந்தாள்.

"எண்ணெய் முடிஞ்சு போச்சம்மா...." மனோகரி வெறும் போத்தலை எடுத்துக் காட்டுகிறாள்.

"அடடா.... இப்ப சமையலுக்கு வேணுமே.. ஹர்த்தாலெண்டு கடைகளும் பூட்டி இருப் பாங்கள்..." பார்வதி அலுத்துக் கொண்டாள்.

"சந்திக் கடை ஒன்றைக் கதவாலை திறந்திருக்கும்..." சங்கரி முன் வாசலில் இருந்து குரல் கொடுத்தாள்.

"மனோகரி நீ போய் வேண்டிக் கொண்டு வா.. நான் சோறு வடிக்கப் போறேன்...." பார்வதி சொல்லிக் கொண்டே சொய்யாவிற


படிப்பகம்

www.padippakam.com

எடுத்துப் புதும் பார்த்தான்,

மனோகரி உடையை மாற்றி பொத்தியும் காசையும் எடுத்துக் கொண்டு சந்திக் கடைக்குப் புறப்பட்டாள்.

மத்தியான வெய்யில் சுட்டெரித்தது. பாதையில் நடமாட்டம் குறைவாக இருந்தது. பாடசாலை மூடப்பட்டிருந்ததால் சிறுவர்கள் பந்தடித்தும் மயிர் விளையாடிக் கொண்டும் இருந்தார்கள்.

மனோகரி எண்ணெயை வாங்கிக் கொண்டு கடையிலிருந்து வருகையில் சந்தியில் நண்பர்களுடன் நாதன் சைக்கிளில் இருப்பது கண்ணில் பட்டது. ஆட்கள் நிற்பதால் அவன் எந்தத் தொல்லையும் செய்யமாட்டான் என்ற துணிவில் மனோகரி நடந்தாள்.

சிறிது தூரம் சென்றதும் சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தாள். நாதன் அவளுக்குப் பின்பாக சைக்கிளில் மெதுவாக வந்து கொண்டிருந்தான். தூரத்தில் அவன் நண்பர்கள் நின்று பார்ப்பது தெரிந்தது.

மனோகரி அவசரத்துடன் வேகமாக நடந்தாள். இடையில் இரண்டொருவர் எதிர்ப்



படிப்பகம்

www.padippakam.com

கையில் துணியைப் பிழிந்துகொண்டாள். கோபத்தால் அவள் உடல் வெப்பமாகியது. இன்று இதை எப்படியும் அம்மாவிடம் சொல்லிவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டாள்.

மத்தியானச் சாப்பாடு முடிந்தபின் மனோகரி விஷயத்தை வெளியிட்டாள்.

"இவங்களுக்கெல்லாம் பள்ளிக்கூடம் ஒரு கேடா....."

பார்வதி திட்டினாள்.

"செருப்பைக் கழட்டி அடிக்கணும்..... "சங்கரி பொரிந்தாள்.

பார்வதி மகளுக்குச் சமாதானம் சொல்லி துணிவுண்டாக்கினாலும் மனதுக்குள் பயமாக இருந்தது.

* * * * *

மனோகரி காலையில் பாடசாலைக்குப் போவதற்கு முன்பே நாதனின் நண்பர்களின் வகுப்பறையில் 'நாதன் மனோகரி காதல்' காவியமாக விரிக்கப்பட்டிருந்தது. ராணியும் தான் பார்த்தவற்றைக் கொண்டு மெருகூட்டினாள்.

மனோகரி வகுப்பறைக்குள் நுழைந்தபோதே கேலிக் கிண்டல்கள் ஆரம்பமாகின. ஜாடைமாடையாகவும் நேரிடையாகவும் சிலர் பேசினார்கள். மனோகரிக்கு

படிப்பகம்

www.padippakam.com
அழுகை வந்தாலும் அடக்கிக் கொண்டாள்.

பாடங்கள் மாறிக் கொண்டிருந்தாலும் அவளால் பூரணமாக ஈடுபட முடியவில்லை. மனம் கொந்தளித்துக் கொண் டிருந்தது.

மதியமான இடைவேளையுடன் பாடசாலையை விட்டு புறப்பட்டு வீட்டுக்கு வந்துவிட்டாள். பார்வதி திகைப்பு டன் காரணத்தைக் கேட்க மேனகா அழுதுவிட்டாள்.

"அம்மா.. நான் இனிப் பள்ளிக்கூடம் போகவில்லை"

"ஏம்மா... இந்தப் பள்ளிக்கூடமில்லாட்டா இன் னொரு பள்ளிக்கூடமில்லையா....." பார்வதி மேனகாவின் தலையை ஆதரவுடன் தடவினாள்.

"இல்லையம்மா... நான் எங்கேயும் போகலே... வெளி யாலே போகவே விருப்பமில்லையம்மா...."

பார்வதிக்கும் கண்கள் கலங்கின. நாதனை நினைக்கை யில் உடம்பெல்லாம் எரிந்தது. மனதுக்குள்ளேயே அவனைத் திட்டித் தீர்த்தாள்.

ஆண் துணையின் தேவை அப்போது தான் அவளுக்குப் பட்டது. மறைந்த புருஷனை நினைத்துக் கலங்கினாள். மடியில் படுத்து குழந்தை போல் அழும் மகளைப் பார்த்துக் கலங்கினாள்.

ஓ..... பெண்கள் தான் எவ்வளவு கஷ்டம்


படிப்பகம்

www.padippakam.com

அனுபவிக்கிறார்கள். அச்சம் மடம் நாணம் பயிர்ப்புகளை ஆதாரமாக வைத்தே அவர்கள் அடக்கப்படுகிறார்கள். அச்சப் படுத்தப் படுகிறார்கள். அழவைக்கப் படுகிறார்கள். பெண் வாழ்க்கை பற்றிய கருத்துக்கள் தாராளமாக எல்லோராலும் பகிரப்படுகின்றன. ஆனால் இதைப்பற்றிப் பேச ஒரு பெண் மேடை பெறுவதோ வெட்கமில்லாதவள். பெயரால் மட்டுமே... என்ற இழப்புப் பட்டங்களைப் பெற்று வாழ்கிறாள்.

ஊர் நாடகம் கொஞ்சம் பிடித்தால், தலை நிமிர்ந்து நடந்தால் ஆண்களோடு 'சகஜமாகப் பழகினால் — அவள் ஒரு மாதிரி..

புது மனிதர்களின் இலக்கணத்தையே மாற்ற முனைகிறேன். வாழப்படவில்லை. அவை பெண்ணால் பேசப்படுகிறது — கதைகளுக்குக் கருவாக அமைவதே உதவின.

பாடசாலையிலிருந்து வந்த சங்கரி அவளது நைந்த கொள்வாப்பட்டதும் துள்ளிக் குதித்தாள். அவளால் தான் என்ன செய்ய முடியும்...?

அன்றிரவு அந்த வீட்டுச் சமையல் நடக்கவில்லை. மூன்று பெண் ஜென்மங்களும் கவலையாக இருந்தன.

www.padippakam.com

அந்த நாள் மாலை பார்வதி நாதனின் வீட்டுக்குப் போனாள். அடம் பாலாக வீடு இருந்தது. நாதனின் தாயும் தந்தையும் இருந்தார்கள். நாதன் வெளியே போயிருந்தான்.

பொதுக்கு நாட்டு நடப்புகளைக் கதைத்துவிட்டு பார்வதி சீக்கிரமே விசயத்துக்கு வந்தாள்.

"உங்கடை மகன் மனோகரிக்குத் தொல்லை கொடுக்கிறானாம்..... அவள் இனி படிக்க மாட்டேன் என்று அழுது கொண்டிருக்கிறாள்.."

"இப் பொடியன் வயதும் அப்படி இப்படி..." நாதனின் தந்தை சொல்லிக் கொண்டே மெல்லதாகச் சிரித்தார்.

"அதுக்காக.. என்னப்பு ஒரு வயதுக்கு தானே இருக்க வேணும்....."

"நீங்கள் இதெல்லாம் இந்தக் காலத்துப் படங்களால வாற வினைகள்... அதிலே கட்டிப்பிடிச்சு ஆடிப் பாடுறதைப் பார்த்து தாங்களும் அப்படிச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுறான்கள்."

"அவங்களுக்கு ஆசையாக இருக்கலாம் பெண்களுக்கு அரிகண்டமாக எல்லோ இருக்கு... விருப்பமில்லாத பெண்ணொண்டு தெரிஞ்சால் அவனுடைய வழிக்கே போகாமல் இருக்க வேணும்... அதை

படிப்பகம்

www.padippakam.com

விட்டுவிட்டு எப்பவும் அவன் பின்னாடி சுத்துறதா..."

"சீச்சீ நீங்கள் வீணாகக் கோபப் படுறியள். பிள்ளைகள் விளையாட்டுக்குச் செய்யிறதை நாங்க எல்லாம் பெரிசு படுத்தக் கூடாது. நீங்கள் அவையள் வயதிலைப் படம் பாக்கல்லையே?"

பார்வதி பொங்கி வரும் கோபத்தை அடக்கிக் கொண்டாள். ஒரு பெண்ணின் எதிர்காலத்தைப் பாதிக்கும் விஷயங்களைப் பற்றிக் கதைக்கும் போது சினிமாவைப் பற்றி அவர் கதைக்கிறார். அவர் மனைவியே தானும் பெண் தான் என்பதை மறந்து எந்தவிதக் கரிசனையுமில்லாது தேனீர் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள். பார்வதி ஆசிரியையாக இருந்தாலும் பெண் தான். ஒரு ஆணுக்கு முன்னால் நின்று இதைவிட்டு மேல் கதைக்க முடியவில்லை. வெறும் உணர்ச்சிகளோடுதான் வெளியே வந்து விட்டாள்.

அன்று வீட்டுக்கு வந்த நாதன் பார்வதி வந்த விசயத்தைக் கேட்டு அதிகமாக ஆத்திரப்பட்டான்.

* * * * *

மேனகா பாடசாலைக்குப் போவதை நிறுத்தி இருந்தாள். அவ்வப்போது மாறுதலுக்காக கடை



படிப்பகம்

www.padippakam.com

குருக்கு மட்டும் போய் வந்தாள்.

புதிய கதை ஒன்று நாளுரும் நாவல்களாகப் பரப்பப்பட்டது. பார்வதியின் நடந்த சரி இல்லை... இதைச் சம்பந்தப்படுத்தி கற்பனை உபகதைகளும் அந்த ஊரில் உலா வந்தன.

பார்வதியின் டியூஷன் நிறுத்தப்பட்டது. சங்கரியின் படிப்பும் நிறுத்தப்பட்டது. அக்குடும்பத்தைப் பற்றிய தாழ்வான அபிப்ராயம் ஊர் எங்கும் நிலவப் பட்டது.

பல இரவுகள் அந்த மூன்று பெண்களுக்கும் நீளமாகக் கழிந்தன. அத்தியாவசிய அலுவல்கள் மட்டும் நடைமுறைப் படுத்தப்பட்டன. மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு வீட்டுக்குள் ஒன்றாய் வாழ்க்கை நடாத்தினா(ர்கள்). எவரோடும் பேசாமலேயே இருந்தனர்.


வம்புப் பேச்சுக்கள் அவமரியாதைகள் இருக்க அவர்களின் வெறுப்பு உச்சமாகிய போது பார்வதியின் தூக்க மாத்திரைகளை எல்லோரும் பகிர்ந்து சாப்பிட்டார்கள். ஒருவரை ஒருவர் அணைத்து அழுதார்கள். ஒருவர் பக்கத்தில் ஒருவராகப் படுத்தார்கள்.

அதன் பின் அவர்கள் எழும்பவே இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

அவர்களின் பொது உணர்வுகளுக்கு கொடுத்தா
னை தாங்கவில்லை. அதனால் அவள் தனியே ஒவ்
வாத போன்று அவலங்களையும் இந்தச் சமூகம் கொடு
த்தான் செய்துவிட்டது. அவர்களை மணக்கவில்லை.
நிரபராதிகளான அவர்களுக்கு சமூகத்தினர் கட்டாய
மாக மணம் முண்டக அதிக்கப்படு விட்டது.




படிப்பகம்

www.padippakam.com

# ஒரே ஊர்லே..

## 1

மாலை வெய்யில் வானம் மஞ்சள் பூசி இருந்தது. மேகங்கள் நிதானமாகப் போய்க் கொண்டிருந்தன. காற்று லேசாக வீசியது.

அந்தக் கோட்டையிலிருந்து டியூஷன் முடிந்து எல்லோரும் வெளியே வந்தனர். அவரவர் தேம்பத்திற் பொருத்தமான விதமான கருத்தொப்ப வண்ணங்களிலும், தாராதரங்களிலும் வேறுபட்ட உடைகளுடன் இளைஞர் - இளைஞிகள் கலகலத்து வந்தனர்.

சைக்கிளில் சிலர் மிதித்துக் கொண்டு போனார்கள். தோழர், தோழிகள் ஒன்றாய் சிலர் அழுக்காகப் போனார்கள்.

எல்லோரும் வெளியேறினாலும் இரண்டு பேர் மட்டும் அதே கூடத்தில் - மாமரத்தின் கீழ் நின்றிருந்தனர்.

யோகன் - காந்தா என்பட்ட அவர்களே நெருக்கமாக அறிமுகப்படுத்தினால் - ஒன்றிரண்டு வயது வித்தியாசமான வாலிபனும் - வாலிபியும். கொஞ்சம் கூடத் தெரிய வேண்டுமானால் - நீண்ட நாட்களாக காதலித்துக் கொண்டிருப்பவர்கள்.

அவர்கள் குறைக்கும் யாவற்றையும் எழுத்

www.padippakam.com

கூடாது. வெட்கமாக இருக்கும். தெரியாதவங்க மட்டும் இனி போடு.

"வீட்டுல எப்பவும் எனக்கு ஏச்சு விழுதே.. உனக்கு இன் கிழே தங்கச்சியின் இருக்கைக்கு உதவ னாய் தேவைதானா எனக் கேட்கிறேன்."

"அதுவும் நியாயம் தானே...."

"சீ. உன்னோட்டு எப்பவும் பகிடி தான்...."

"பின்னே என்ன செய்யறது.. இந்த வயசிலே கலியாணம் செய்ய வேணுமோ..."

"வயசு போகுதோ வர் பண்ணினாங்க...."

"கொஞ்சப்பட்டதையும் காக்கறே... சங்கட வீட்டை யும் விசயம் தெரியும் அவையளாக ஏதேனும் கதைக் கிறதோ என்டு பார்த்தான். இப்படி நாலும் பேசாமல் இருந்தேன். இனி நாளை கதைச்சுப் பார்க் கிறேன்."

"சொல்லாதையுங்கோ... செய்து காட்டுங்கோ..."

"அவசரப்படக் கூடாது.. பொறுக்கே. இந்தச் சட்டை எப்போ தைச்சது..?"

இனி எல்லாம் கேட்கக் கூடாது..!

* * * * *

www.padippakam.com

"விசாரிக்க ஆள்விடு மச்சான்.. பொண்ணோட ஒழுக்கமாம் போயிருக்கு..."

"ஏண்டா... பொறேன். எவ்வளவு நாளைக்குப் பேய்க் காட்டுவான் என்டு பாப்போம்.."

வாசிக சாலயின் வெளிப்பக்கம் மரக்குற்றி ஒன்றிலிருந்து மூர்த்தியும் முருகனும் தான் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

முருகன் குவைத் போவதற்காக கடன் வாங்கி ஏஜன்சி ஆள் ஒருவனிடம் பணத்தைக் கட்டியிருந்தான். ஏழு மாதங்களாகியும் அவனுக்கு எந்த ஒழுங்கும் செய்யப்படவில்லை. பல முறைகள் அவனிடம் போய் ஏமாந்து தான் வந்து கொண்டிருந்தான்.

"காசு கடன் தந்தவை எல்லாம் நெருக்கினம்.. என்ன செய்யிறது என்டு தெரியேல்லை.."

"கனக்க யோசியாதை மச்சான் எல்லாம் வடிவா நடக்கும்.. பிந்தினதும் நல்லதுக்குத் தானோ தெரியாது. இன்டைக்குப் பேப்பர் பார்த்தனியா?"

"இன்னும் இல்லை.. என்ன புதினம்..?"

"வவுனியாவில் ஆமி வீடு வீடாகப் போய் ஆட்களைச் சுட்டிருக்கு. பொம்பிளையளையும் கற்பழித்துப் போட்டாம்."

படிப்பகம்

www.padippakam.com

"நாங்கள் எல்லாம் பொறுப்பாக எண்டு சொல்லிக் கொண்டு பின்னுக்கு நிக்கேக்கை இப்படி அனியாய மக்கள் நடந்து கொண்டு தான் இருக்கும்."

"உண்மை தான் இப்பவும் பார் சனம் நகை நட்டை விற்று.. சேமித்த காசை எடுத்து ஜேர்மனி சுவிஸ் லண்டன் என்று போகினம். கொஞ்சம் கஷ்டத்தை இருக்கிறவன் பெரிய முதலாளி எல்லாம் இந்தியா போய் சுகமாக சந்தோசமாக இருக்கினம்."

"உவ்வளவும் ஏன் இப்பவும் தங்களுக் கொண்டும் நடக்கல என்ற துணிவில் விழுவோ படம் காட்டுகினம். காலையும் இடையில் எல்லாம் விழுவோவில எடுக்கிறதுக்காக சினிமா படங்கள் மாதிரி நல்லாக் காசை செலவழித்துக் கொண்டாடுகினம்."

"இப்படிச் சனங்கள் எல்லாம் பாசத்தையிழந்து தங்களின் வாக்கில் கொள்ளப் பாக்கையில் எப்படி நல்ல முடிவு வரும்..? என்றே பார் இவ்வாறு கதைக்கிறேன். இதால் நாமும் நாட்டுக்காக ஒன்றும் செய்ய முடியாது இருக்கு.. எப்ப இவைகள் போவான் என்பது தான் எதை.. முடியும்போலையும்."

"நீங்கள் பரவாயில்லை கஷ்டப்பட்டு உழை

www.padippakam.com

க்கூத்தான் இவர்களுக்கு போதும். மற்றவர்கள் எல்லாம் புதுச்சேப் நாமெல்லாம் போல இருந்து கொண்டு தண்ணி அழுகிறதும் படும் பாக்கிறதுமாய் தங்களோடை எதிர் காலத்தையே நாசமாக்கிக் கொண்டிருக்கினம்." மீந்தி மனதுக்குச் சமாதானம் சொன்னாலும் உண்மையில் தான் கூடவும் இருப்பவர்கள் தாம் என்பதை நன்கு புரிந்து கொண்டான்.

* * * * *

உடம்பெல்லாத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அந்தக் கிழந்தை மண்ணில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. கிழந்தை தூக்கிப் பார்க்கவே என்று வெட்கப்பட்டவன் நான் இன்று அந்தத் தண்ணி இருந்து கழித்துக் கொண்டிருந்தது.

பெண்ணையின் உள்ளே வள்ளிநாயகி மாக்கறி வெட்டிக் கொண்டிருந்தாள். நாகலிங்கம் கோடியில் ஒரு பெட்டியை வைத்து விட்டு வாளியிலிருந்த தண்ணீரை எடுத்துக் கொண்டு வெளியே போனான். முகம் கை கால் கழுவி விட்டு மீண்டும் உள்ளே வந்தான்.

"காசிப் பிள்ளை வீட்டை போனனீரோ?" வள்ளி நாயகி வெட்டிக் கொண்டே கேட்டாள்.

"ஓமோம்..." [illegible]புடன் சுவரோடு சாய்ந்து

www.padippakam.com

கீழே இறங்கினான் நாகலிங்கம்.

"என்ன சொல்லுகிறாய்..?"

"கடையை எழும்பத்தான் வேணுமாம்.. கலியாணம் இன்னும் 3 கிழமைக்குள்ளை நடக்குமாம். அதுக்கு இன்றே போயிடட்டாம்.."

நாகலிங்கத்தின் குடிசை அசிப்பின்ரை மனைவின் காணியிலேயே இருந்தது. ஊருக்கு ஒதுக்குப்புறமாக கவனிப்பாரற்று பற்றைக் காடாக இருந்த காணியை சுத்தப்படுத்தி வாங்கி குடிசையும் போட்டு சிறிய குடிசைத் தோட்டமும் வைத்து நீண்ட நாட்களாகக் குடி இருக்கிறான் நாகலிங்கம் வள்ளிநாயகி குடும்பத்தார். விறகு வெட்டியும் கூலி வேலை செய்தும் நாகலிங்கம் குடும்பத்தின் பசியைப் போக்க முனைந்து கொண்டிருந்தான். நாட்டு நிலைமை காரணமாக அவனின் உழைப்பும் குறைந்து கொண்டே வந்தது.

இந்த நிலைமையில் தான் அசிப்பின்ரை தம் மகளின் கலியாணத்துக்கு அந்தக் காணித் துண்டை சீதனமாக எழுதி விட்டதாகவும், நாகலிங்கம் அந்த இடத்தை காலி செய்து கொடுக்க வேணும் என்றும் சொல்லிவிட்டார்.

www.padippakam.com

நாகரீகத்துக்கோ அல்லது பெண்ணிடம் எதுவுமில்லை. எங்கேயாவது போய்க் குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்றும் பாதுகாப்பான இடமாகவும் தெரிந்தவர்களின் இடமாகவும் எதுவுமில்லை. அவள் எதையும் யோசிக்கவே விரும்பவில்லை.

* * * * *

தனபால் சைக்கிளை சுவரோடு சாத்திவிட்டு உள்ளே போனான்.

"என்னப்பா இவ்வளவு நேரம்...? ஆ... இதென்ன கையில கட்டு..." மகன் சதீஷ் படபடத்தான்.

"என்னப்பா.. என்ன நடந்தது...?" சேலையால் கையைத் துடைத்துக் கொண்டு வந்த மீனாட்சியும் கேட்டாள்.

"ஒண்டுமில்லை. தபால் கொடுத்துக் கொண்டு வரேக்கை பலாலி றோட்டால ஆமிக்காரன் சுட்டுக் கொண்டு போறான்.. எங்கேயும் பதுங்க முடியேல்லை நான் சைக்கிளோடை வெளியிலை விழுந்திட்டன். பின் ஒரு கல்லு காலடியாக கீறிப் போட்டுது.. அதுதான் ஆஸ்பத்திரிக்குப் போய்க் கட்டுப் போட்டுக் கொண்டு வாறேன்." சொன்னவாறே கதிரையில் அமர்ந்தார் தபால்காரர் தனபால்.

"பொல்லாத வேலை. உயிரைக் கொடுத்துச் செய்

படிப்பகம்

www.padippakam.com

ய வேணுமாக்கும். அதுவரை எல்லாம் பயந்து வீட்டுக்கை பதுங்கி இருக்கிறான். இவருக்கு மட்டும் கடலை உணர்ச்சி போகல." மீனாட்சி முணுமுணுத்துக் கொண்டே சுடச் சுட கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

"கடலை உணர்ச்சி இல்ல. வயிற்றுப் பசிக்குத் தான் போறேன்."

"அப்படி என்ன அவசரம்...? மீன்கார மாணிக்கம் இண்டைக்கு வந்தவன். ஏண்டாப்பா கன நாளாக மீன் கொண்டு வாறதில்லை எண்டு கேட்டேன். உங்களுக்குச் சொன்னமா.. மீன் இல்லை எண்டு கவலைப் படுறியள். கடலுக்கு போறவை உயிர் இல்லாமல் கரைக்கு வாறான். முந்தியெல்லாம் தொழிலுக்கு போகையிக்கை காத்துக்கும் மழைக்கும், கடலுக்கும் தான் பயப்பட்டோம். இப்ப துவக்குப் பிடிச்சிருக்கிற மனிசருட்டை இருந்து தப்புறதே பெரிய காரியம். கடலுக்கு போய் காசு உழைக்காட்டியும் பறவாயில்லை. குழந்தை குட்டியோட இருக்கிறதைக் கொண்டு சாப்பிடுவோம் எண்டு சொல்றான்." மீனாட்சி மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள்.

"எல்லாராலேயும் அப்படி இருக்க முடியுமே..

www.padippakam.com

நாங்க வேணுமென்றால் சாப்பாடின்றி இருக்கலாம். பிள்ளை யளிப் பட்டினி போட மனம் வருமே. காசில்லாமல் படிக்கேலுமே..." இதற்கு மீனாட்சியால் பதில் சொல்ல முடியவில்லை.

"மீனாட்சி, துணிச்சலாய் பிள்ளை பெடியள் எல்லாம் துவக்கு எடுத்துப் போய் சண்டை பிடிக்குதுகள். என்னாலை பெரிசாய் அப்பிடிச் செய்ய ஏலாது. அதுக்காக ஒண்டுமே செய்யாமல் எனக்கு மட்டும் வாழுறது சரியே? எத்தினை பேர் வெளியூரிலை - வெளி நாட்டிலை இருந்து கொண்டு தங்கடை உறவுகளுக்கு என்ன நடந்த - தோ என்று யோசித்துக் கொண்டிருப்பினம். வீட்டிலை இருந்து கதைத்தாத் தானே சாப்பாடும் இருக்கிற அனைவரும் இருக்கினம். இந்த நிலையிலை நான் பார்க்கிற இந்த உத்தியோகம் என்றால் செய்ய முடிஞ்ச சிறு உதவி தான்." தனபாலின் முகத்தில் பெருமிதம் இருந்தது. மீனாட்சி இதன் பின் எதுவும் கதைக்கவில்லை.

11

கிருஷ்ணனின் தந்தை சிவபாதம் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தார். சற்றுத் தள்ளி தாயார் நிலத்தில் கால் மடித்து உட்கார்ந்திருந்தார். கார்த்திகாவின்

படிப்பகம்

www.padippakam.com

அண்ணா தம்பி எல்லாரும் ஏதும் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காந்தரூ அறையாளுள்ளே தனியாக கட்டிலில் படுத்து அழுது கொண்டிருந்தாள்.

"பெரிய கெட்டித்தனம் மாதிரி லவ் பண்ணிப் போட்டா." சிவபாதம் கொஞ்சம் பலமாகவே கதைத்தார். யாரும் இடையில் கதைக்க வில்லை.

"லவ் பண்ணியில்லை ஒண்டையும் யோசியாமை யுங்கோ இப்ப அவங்கள் நகையைக் கொண்டா.. வீட்டைக் கொண்டா எண்டு நிக்கினம். வீட்டை எழுதிப் போட்டு நாங்கள் தெருவிலை போய் நிக்கிறது?"

இதுக்கே யாரும் கதைக்கவில்லை.

"படிக்கிற வயசிலை அவைக் கொரு கலியாண மோ... உவளை படிக்க அனுப்பினதோ.. மாப்பிள்ளை பார்க்க அனுப்பினதோ..."

" - - - - "

"உனக்கெல்லாம் விசயம் தெரியும். அவனோடை நிண்டு சந்தினை செய்யாதை எல்லாம்.. அவளை விட்டால் இனி ஆர் கட்டப் போறான்.. தலைக்கு மேலை இருக்கிறதைய வையாவது யோசி



படிப்பகம்

www.padippakam.com

"... ந் சீசா இப்படி நடந்திருப்பாளோ..."

"- - - -"

"கண்டறியாத காதல் தானே... அதுக்கேயா காலை கேயா காதலிக்கிறாய்..? முதல் நீ தான் வெறும் என்றாணாய். பிறகு விடு நான் இவ்வாறு நீ வெண்டாம் என்பினேன். சில பர்த்தி இருந்தது தானே..."

"- - - - -"

"இருத்தவன் உடைந்துகொறந்திலையே என்டு பொருமல் சாப்பிடுறுதுக்கு கஷ்டமாய் இருக்கு. அவனும் ஒரு பாவி... அவக்கேன் சந்தம் கேட்டா என்ன கேட்காட்டி என்ன இழவெண்டு சொல்லேல் போய் வாறன்."

இவபாதம் தனி ஆவர்த்தனம் வாசிக்க மற்றவர்கள் கேட்டு மாதவன் அனுபவிக்க காத்திருக்கும் அழுது கொண்டிருந்தான்.

★ ★ ★ ★ ★

"என்ன கோபமா ஒட்டுக்கேட்டீர்களா?" முற்றி கடைச் சாமி ஓட்டப்பட்டிக்குப் போட்டனைக் கட்டிக் கேட்டான். முருகன் அந்தக் கடையிலதான் வந்திருந்தான்.

"கோயில் திருவிழாவாம்..." முருகன் சொன்னான்.

"ஓமோம்.. நிச்சயம் தேவதான். எங்கட—

படிப்பகம்

www.padippakam.com

பிரச்சனைகளைக் கண்டு நடந்தே தீர்வார் மாரோனே சுவாமி தானே பேச்சு வார்த்தை நடத்துகிறார்..."

"போடா.... கடவுளைப்பற்றி இப்படி விமர்சிக்காதே."

"உண்மைதான்... ஏழைகளுடன் அகதிகளுக்கு காவல் கொடுக்கிறதே சிவர் தானே. அவரவர் சாப்பாடோ ஏன் உயிரோடை இருக்கவோ வழியில்லை. இந்த நேரத்தில் கோயிலை திருவிழாவோ அவசியமோ?"

"எல்லோருக்கும் ஏதோ ஒரு நம்பிக்கை இருக்கத் தான் வேணும் உன் அப்பா அம்மாவில உனக்கிருக்கிற நம்பிக்கை போலத்தான் மற்றவர்களுக்கும் கடவுளில நம்பிக்கை. உனக்கு நம்பிக்கை இல்லாட்டி அதோடை விட்டிடு. ஆனால் இதுக்கும் பேசாதே... இப்பவும் பார் கோயிலில தான் அகதிகள் இருக்கினமாம்."

"கோவிக்காதை மச்சான். சாப்பாட்டுக்குக் கஷ்டத்தில சனம் இருக்கைக்கை சுவாமிக்கு அபிஷேகம் செய்யிறதும் ஆடம்பரமாய் விழாக்கள் வைக்கிறதும் தான் எனக்குப் பிடிக்கேல."

"உண்மை தான். சனம் இதை உணரவில.



படிப்பகம்

www.padippakam.com

கண் பூர்த்தமான பகுதியை விட பெறுகிறது
தான் இவைகளின் நோக்கம். இப்போதும் காணி
வேண்டுமென்பவையும், வீடு கட்டுவதையும் இருக்கத்
தான் செய்கிறேன். அவைக்கு நிச்சயமாக விலக்
குவது கஷ்டம். இங்களுக்கு ஒன்றும் நடக்காது
தாங்கள் தப்பி வருவோம் என்று நினைக்கிறேன்."

"ஏழையின் துன்பம் கந்தனுக்கும் யோகனும்
லம் பண்ணினது தெரியும் தானே. யோகன் இப்ப
காணிகளைக் கட்டுவது என்டால் வீடு எழுதிக்
தருவேனென்று ஒற்றைக் காலில் நிக்கிறான்."

"இண்டைக்கோ நாளைக்கோ ஆமிக்காரன்
அண்ணை இந்த உயர் பட்டம் எல்லாம் சரி.
அவனுக்கு வீடு வேணுமெண்டா.. முதல்ல இவங்களை
சுட்டுத் தள்ள வேணும்."

"இன்னொரு விசயம் கேள்விப்பட்டனியே..?
காசிப்பிள்ளையர் நாகலிங்கத்தை எழுப்பச் சொல்லி
இருக்கிறார். அவன் எங்கை எண்டு போவான்?"

"எத்தனை தரம் முறை போனாலும் இவங்களைப் போல
ஆட்களின் இனம் மாறாது. தங்களை மாத்தவும் வி
ரும்புகிறில்லை. எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல

படிப்பகம்

மண்ணில் பிறந்து வாழ்ந்து போற நாளுக்கு நாள் சமய அழுக்காறும் காசாசை, நாட்டாண்மை, திண்ணைப் பாக்கனை.., சாதி வெறி, இவைகளுக்கு அழிவே இல்லை. இதுக்கெல்லாம் எப்ப சாவு மணி அடிக்கப்படுதோ அப்பதான் எங்களுக்கெல்லாம் உண்மையான வாழ்வு."

"பெண்ணை மட்டும் இராமனை வச்சு எல்லாத்தையும் பேப்பரிலே நிரப்பி விளம்பரமாக எழுதிப் போடுவாங்க. இதில வேடிக்கை பாக்கலாம். எல்லாமே தான் தான் உணர்ந்து திருந்த வேணும் மாற வேணும்."

"இதுக்கெல்லாம் கதைக்கப் போனால் எங்களுக்கு விசர்ப்பட்டம் தான் கிடைக்கும். நீர் முதல் உம்மைத் திருத்தும் பிறகு எங்களைப் பற்றி யோசிப்பம் என்டு சொல்லுவாங்கள்."

"கதைக்கிறதிலேயே நேரம் போகுது. நான் கடைக்குப் போகவேணும் நான் வாறன்..."

முருகன் விடை பெற்றுக் கொண்டு போனான்.

சேர்த்தி கொஞ்ச நேரம் தெருவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

* * * * *

www.padippakam.com

தண்ணீரை வயிறு முட்டக் குடித்துவிட்டு நாகலிங்கம் குகையின் வெளியே வந்து ஓரத்தில் அமர்ந்தான். கொஞ்ச நேரத்தில் வள்ளி நாயகியும் வந்து பக்கத்தில் அமர்ந்தாள். சிறிது நேரம் இருவரும் கதைக்கவில்லை.

வானத்தில் மேகக் கூட்டம் அதிகமில்லை. கொஞ்சப் பறவைகள் ஒரே திசையில் பறந்து போயின.

"பிள்ளைக்கு கேக்கேல்லையோ?" நாகலிங்கம் தான் மௌனத்தைக் கலைத்தான்.

"என்னத்தைக் கேக்கிறது.. பசியைத் தான் தேத்தண்ணியிலை நிரப்பிக் கொண்டேன்."

நீ சாப்பிட்டியா என்று நாகலிங்கம் வள்ளி நாயகியைக் கேட்கவில்லை. அவனுக்குத் தெரியும் சாப்பாடு அங்கு ஏதுமே இல்லை என்று.

"ஒருத்தரும் வேலைக்கு கூப்பிடுகினமில்லை. அவங்களையும் சொல்லக் குற்றமில்லை. இப்பத்தை நிலையில கூலி வேலை தாற மாதிரி இல்லையே. எல்லாம் எங்கட தலைவிதி."

வள்ளி நாயகி ஏதும் பேசாமல் குச்சி ஒன்றைக் கையால் எடுத்து மண்ணில் கீறிக் கொண்டு இருந்தாள்.

www.padippakam.com

காசிப்பிள்ளை ஒவ்வொரு நாளும் கவைச்சல் பற்றி ஒரு! எல்லாரும் மறந்து இருந்த்_ச் சாகக் கூட— வழி இல்லை." நாகலிங்கத்தின் குரல் கரகரத்தது.

வள்ளி நாயகி இப்பவும் தலை குனிந்து கீறிக் கொண்டிருந்தாள். மண் தரையில் கண்ணீர்த் துளி ஒன்று விழுந்தது.

* * * * *

தயாபால் வீட்டில் எல்லோரும் பரபரப்பாயிருந் தார்கள். சிறுமி அழுது கொண்டிருந்தாள்.

"ஐயோ என்ன நடந்ததோ இந்த வேலை வேண்டாம் வேண்டாம் என்டு சொன்னனே. கேட்கல்லையே"

"ஓ.. கத்தாதை அம்மா அப்பாவை என்ன ஆமிக்காரன் பிடிச்சுக் கொண்டு போட்டானே அவர் இன்னம் வரல்லை அவ்வளவு தானே. உங்க ஏன் குழப்பி வைக்கிறீங்க? அண்ணை தேடிக் கொண்டு போனவர் தானே." மகள் தாயைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள்.

வழக்கமாக பகல் 3மணிக்கு வந்து விடும் தயா பால் அன்று 6 மணி ஆகியும் வரவே இல்லை.

www.padippakam.com

நேரம் போய்க் கொண்டிருந்தது. எல்லோரும் பயப்படத் தொடங்கினார்கள். குழந்தைகள் பெரிதாகவே அழத் தொடங்கின. அவரவர்களும் அழத் தொடங்கினார்கள்.

இரவு 9 மணியானதும் அந்த வீட்டினர் உணவுப் பானி, மக்களுக்காக கஞ்சிப் போட்டு வார்த்துத் தொண்டினைச் சேவையாகச் செய்த, அன்று பகல் இறந்து வந்தார் சுட்டுக் கொல்லப்பட்ட, ஜெபாலின் உடல் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

III

ஒரு மாலைப் பொழுது நான்கு மணி இருக்கும். உறவினர்கள் தத்தமது வழமையான அலுவல்களில் இருந்தார்கள்.

இளைஞர்கள் பெரிய தகவல் ஒன்றையடுத்து இராணுவம் அந்த ஊரைச் சுற்றி வளைத்தது. வீடுகள் கொளுத்தப்பட்டது. மக்கள் குழந்தையிலிருந்து படுகிழவர் வரை உயிர்கள் வதைக்கடமையாகப் பறிக்கப்பட்டது. உடைமைகள் சூறையாடப்பட்டன. பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர்.

கொஞ்ச நேரத்திலேயே கொழுந்து

படிப்பகம்

www.padippakam.com

வீட்டெரியும் நெருப்பினை திண்மையான அழு
கை ஓலங்களினை அந்த ஊரார் அனைவர்க
ளுக்கிருந்த பாச்சிகளுக்கு சமீகமான முடி
வு காணப்பட்டுக் கொண்டிருந்தது.



www.padippakam.com

# உயிர் பறிக்கும் பறவைகள்

மேற்கு ஜேர்மனியின் ஒரு நகரம். பஸ், கார், லொறிகள், ட்ரக்குகள் ஜனங்கள் என்று சுறுசுறுப்பாக இருந்தது. மாலை 3 மணியாக இருந்தாலும் இருளாக இருந்தது. பனி மழை வேகமாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

மாதவன் கையில் சிறிய பையொன்றைத் தூக்கிக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தான். பாதையில் இருந்த பனிக்கட்டிகளில் தடுக்கித் தடுமாறும் போது பைக்குள்ளிருந்த போத்தல்கள் தமக்குள் மோதிச் சத்தம் போட்டன. பெரிய வாகனமொன்று பாதையைத் துப்பரவு செய்து கொண்டிருந்தது.

மாதவன் தனது வீட்டின் கட்டடக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். பருப்புக் கறி மணம் எங்கும் பரவி இருந்தது. அது ஒரு 4 மாடிக் கட்டடம். 4 மாடியிலும் இலங்கையிலிருந்து வந்த அகதிகள் எனப் பட்டவர்கள் குடி இருந்தார்கள். சுற்றிலும் ஜேர்மனியரின் கட்டடங்கள் இருந்தன. மாதவனின் அறை உச்சியிலிருந்தது.

மாதவன் தனது அறைக் கதவைத் திறந்து உள்ளே போனான். அவனைக் கண்டதும் உள்ளே இரு

படிப்பகம்

www.padippakam.com

ந்தவர்கள் "போதர் வந்திட்டுது" என்று சந்தோசப்பட்டனர்.

பையிலிருந்த போத்தல்கள் எடுக்கப்பட்டு மூடிகள் திறக்கப்பட்டன. ஒவ்வொருவரும் தமக்கென ஒவ்வொன்றை எடுத்துக் கொண்டனர். மாதவன் போத்தலுடன் பொரியல் கொஞ்சமும் எடுத்துக் கொறித்துக் கொண்டு கதிரை ஒன்றில் சாய்ந்து கொண்டான்.

அந்தப் பகுதியிலிருந்த இரண்டு அறைகளிலும் நான்கு நான்கு பேராக 8 பேர் வாசம் செய்தனர். 8 பேருக்கும் பொதுவாகவே குளியலறையும் சமையலறையும் இருந்தன.

முதல் அறையில் மாதவன் - படித்து விட்டு வேலை எதுவும் இல்லாதிருக்க பெற்றோர் இங்கு அனுப்பப்பட்டவன், சங்கர் - படித்துக் கொண்டிருக்கும் போது தீவிரவாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுமோ என அச்சம் கொண்ட பெற்றோரால் வழி அனுப்பி வைக்கப்பட்டவன், வேதநாயகம் - அரசாங்க ஊழியராக வேலை செய்து கலவரத்தின் போது வேலையை இழந்து இடம்பெயர்வு காரணமாக வந்தவர், ஜீவன் - எல்லோரும் வெளிநாடு போகிறார்களே என்று தானும் புறப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

வந்த பணக்கார வீட்டுப் பிள்ளை. ஆகிப்போனதெல்லாது.

உலக அனுபவம் தெரியாமல் - குடும்பக் கஷ்டத்தால் உழைக்கலாம் என்று வந்தவன், ராஜலிங்கம் - இராணுவ முகாம் பக்கத்தில் இருக்கிறது என்பதால் தனது உயிரை எண்ணிப் பயந்து வந்தவன், ரவி - அண்ணன் தீவிரவாத இயக்கத்தில் இருப்பதால் தனக்கும் இராணுவத்தால் ஆபத்து ஏற்படலாம் என்று பயந்து வந்தவன், சேகர் - கலவரத்தில் சொத்து வீடு, பெற்றோர் எல்லாவற்றையும் இழந்தவன்.

இவர்கள் அத்தனை பேரும் இலங்கையில் வெவ்வேறிடங்களில் வசித்தாலும், வெவ்வேறு துறைகளில் - நாட்டங்களில் இருந்தாலும், வேறுபட்ட வயதினராக இருந்தாலும் அன்னிய நாட்டுச் சூழ்நிலையும், மது விருந்தும் ஐக்கியமாகிப் போனார்கள்.

கவலைக்காக எதுவுமே இல்லை என்பதற்காக வாழ்க்கை மேலுள்ள வெறுப்புக்காக பொறுப்பில்லாததற்காக, நாகரீகத்திற்காக குடித்தார்கள்.

"டெலிபோனில பேச்சு என்னவாம்?" சங்கர் பொரியலைக் கடித்தபடி கேட்டான்.

"அந்தநாள் பிரான்ஸில இருந்து தங்கச்சியிருக்

புடிப்பகம்

www.padippakam.com

கிறார்கள். இதுதான் பெட்டர் நீயும்..." எனச் சொன்னான்.

"உதவி வாடா மச்சான்.. நாங்கள் இங்கே இருந்து கதைச் சொன்ன பாவனை. சாதிச் சனம் சாதகமே." ஜீவன் சொல்லிக் கொண்டே வாயில் இன்னொரு பீடி மூட்டிக் கொண்டான். "புதிசா என்ன படம் வந்திருக்கு" ஜீவன் தான் கேட்டான்.

"விஜயகாந்தின்ர ஒண்டு வந்திருக்கு.... ரேவதியும் நடிக்கிறாள்." சங்கரன் சொன்னான்.

"ரேவதியுமோ... அப்ப நல்லா இருக்கும்." ஜீவன் அடுத்த பீடியும் மூட்டிக் கொண்டான்.

தாய் நாட்டில் நடைபெற்று வரும் பிரச்சினைகளின் பல காரணமாக இங்கே வந்தவர்கள் நாட்கள் போகப் போக அந்தப் பிரச்சினைகளிலிருந்து விலகிப் போனார்கள். பிரச்சினைகள் எல்லாம் வெறும் செய்திகளாகின. அன்றாட முக்கியமானவை மனதைக் கவர்ந்தவை அவர்களுக்கு ஏராளம் இருந்தன. மதுபானம் சினிமாப் படங்கள் டிஸ்கோ... என்று அவர்கள் வேறு உலகத்துக்குப்


படிப்பகம்

www.padippakam.com

போய்விட்டார்கள்.

இறந்து போனவர்கள் அந்தந்தப் புரியே ஜீவ னும் பறந்து விட்டார்கள். இனி அவர்களின் அந்த போச்சின் இரவுக் காப்பாளே. அதுவரை அவர்கள் நிம்மதியாக உறங்கலாம்.

தேவராசா மட்டுமே நித்திரை கொள்ளவில்லை. அவன் மனம் உறங்கவில்லை. விட்டுப் போனவர்கள் நெடுமோ தையலும் நிழலாயின.

தகப்பனில்லாத குடும்பம். மூத்த அண்ணன் தோட்டம் இறைப்பவன் தேவராசா. கடையில் வேலை செய்து வந்தவன் காலவரத்தின் போது கடை எரிக்கப்பட்ட தொழில் இழந்தான். அவன் பின்னால் இரு தங்கைகள் படித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு பொறுப்பும் ஐம்பது வயது மூத்தவனின் தோட்டமும் இடையிடையே வீட்டு வேலைகள் செய்யும் தாயின் கூலிப் பணமுமே.

வெளிநாடு போகும் ஆசை தீராமல் சென்று ஏஜென்சிக்கு காசு கட்டினான். அவன் காலவரையின்றி ஏமாற்றவே காசை வாங்கி கொழும்பிற்கு வந்து விட்டான்.


படிப்பகம்

www.padippakam.com

இவர்கள் அகதிகள் எனக் கொண்ட இராணுவ சாதாரணம் அவர்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. இடம்பெயர்த்தப்பட்ட நகரத்தில் இருந்து மற்றைய இடங்களுக்குப் போகக் கூடாது என பணிந்து. மற்றையது குறிப்பிட்ட காலத்துக்கு முன்போ பிந்தியோ இவை செய்யக்கூடாது என்பது.

கிட்டத்தில் மத்தியில் காணியை விட்டுவைத்து எடுத்த கனை உழைத்து அனுப்ப வேண்டும் என்று தேவராசா கட்டளையிடுவதாகவும் இவை தெரிகின்றன. வருடங்கள் உருண்டோடியும் அவனுக்கு இவைகளைப் பெற முடியவில்லை. வீட்டிலிருந்தோ நாளுக்கு நாள் கூடும் கடன்களைப் பற்றி பட்டும் படாமலும் எழுதப்படும் கடிதங்கள் வந்தன.

தேவராசாவால் எதுவும் செய்ய முடியவில்லை. அகதிகளுக்கான உதவிப் பணத்தில் மிச்சம் பிடித்து அனுப்பிக் கொண்டிருந்தான். எல்லாவற்றிற்கும் முடிவாக அண்ணனின் திருமணம் செய்தியும் மற்றவர்கள் அகதி முகாமுக்குப் போன செய்தியும் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன.

அன்றிலிருந்து தேவராசா குடிக்கத் தொடங்-


படிப்பகம்

கிறான். நாளைக்கு நான் போகும்போது எல்லாவற்றை யும் சொல்லுகிறேன். அவள் வீடு தெரிந்தவளா யிருந்து வாய் விட்டு அழுவாள்.

"இவுங்க காப்பாத்த என்ன செய்வோம்..." பெருமாள ம் கேட்டாள். அவர் தான் அங்கிருப்பவர்களிலேயே வயது முதிர்ந்தவரும் - திருமணமானவரும்.

"நோட்டு அடிப்போம்.." சேகர் சொன்னான். அவனு டைய கவலை அது!

எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட இவுங்க காப்பாற்றும் வழி அழுத்தமாய் தொடங்கியது. சேகர் மேசையோடு சண்டை பிடிக்கத் தொடங்கினான். ரவி உடைந்த கிளாஸ் தோழியை பெரும் பாடு பட்டுக் கொண்டிருந்தான்.

ஜீவன் ஒரு பெரிய காகிதத்தில் ஆங்கிலப் பாட ஒன்றை எழுதிவிட்டு ஆடிக் கொண்டிருந்தான். நாடு மாறினாலும் அவன் பாடல்கள் மாறாமல் இருந்தன, மற்றவர்களோ ஆகிரமாய் பண்ணுவார்கள். குழுவில் வட இருப்பவர்களே முதல் தொடர்ந்து தண்டிப்பவர். அவனுடைய கண்வெள்ளம் எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டுமென்று.

வெட்டுக் காய் கிளாஸில் வேகமாய

www.padippakam.com

கள் கறி வைக்கத் தொடங்கினார். கறியைச் சுவை யாக வைப்பதில் அவர் கெட்டிக்காரர்.

அரசாங்க உத்தியோகம் பார்த்துக் கொண்டு குடும்பத்துடன் நிம்மதியாக இருந்தவரின் வாழ்வை நாட்டின் பிரச்சினைகள் பாதித்தன. காவலரணில் இடம் மாறி சொந்த ஊருக்கு வந்தவர் மனைவியின் நகைகளை விற்று பழைய இடத்திலே சொந்த தொழில் பார்க்க அனுமதிக்காததால் வேலையிழந் தவர்களின் படையணியில் அவரும் சேர்ந்து கொண் டார். தனது தகமைக்கேற்ப ஏதாவது தொழில் கிடைக்காதா என்று நம்பிக்கையுடன் இருந் த வந்தவருக்கு ஏமாற்றம் தான் கிடைத்தது. காலப்போக்கில் இன்னும் வயது குறைந்தவர்களு டன் சம வயதுத் தொழுகை மாறி முதலில் நிம்மதி பெற்றார்,

ரொட்டி கறி இரண்டும் தயாரானவுடன் எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டார்கள்.

அன்றைய பொழுது போய்க் கொண்டி ருந்தது. சாப்பாட்டு வகைகளைப் பார்க்கும் நிலைப்பாட்டில் வித்தியாசம் இருந்தே

www.padippakam.com

பெரிய அவர்களுடைய அன்பு அரவணைப்பு —
பொழுதுகளில் எந்தவித மாற்றமும் இருக்கவில்லை.

சமைத்தார்கள் சாப்பிட்டார்கள் கொழுத்தார்கள். சினிமா பார்த்தார்கள். படம் பார்த்தார்கள். பாட்டுக் கேட்டார்கள் படித்தார்கள்.

ஏதாவது மாறுதல் இருக்க வேண்டுமென்ற பாங்காக தமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் அடிபட்டுக் கொண்டார்கள். பொருட்களைப் பழுதாக்கினர்கள். பெரிய சத்தமாக பாட்டு போட்டுக் கேட்டார்கள். எல்லா வகைகளிலும் ஏதாவது மனக் களிப்பிருந்து விரக்தியாய்ப்பட்டார்கள்.

படம் ஓடிக் கொண்டிருக்கையில் விமர்சனங்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்தது.

"அவன் திறமாய் நடிக்கிறான்."

"இவள் சரியான செக்ஸி"

"அருமையான பாட்டு"

அவர்களில் யாருக்குமே வேறெங்கும் நினைவு செல்லவில்லை. தினம் தினம் சூடுபட்டுச் சாகும் நாட்டில் இருக்கும் தமிழர்களின் பரிதாபம் தெரியவில்லை. படத்தில் கதாநாயகனுக்குக் காலில்லை என்று கவலைப்பட்டார்கள்.

படிப்பகம்

கொளுவத்தினால் கற்பழிக்கப்படும் தமிழ்ப் பெண்களின் அவலம் தெரியவில்லை. படத்தில் வரும் கற்பழிப்புக் காட்சியை படு செக்ஸ் என்று ரசித்தார்கள்.

எதிரியுடன் போராடும் வீர மரணம் அடையும் புலி இளைஞர்களின் தியாகமும் துணிவும் புரியவில்லை. படத்தில் கதாநாயகன் காற்றிலே பறந்து பத்துப்பதினைந்து வில்லன் கையாட்களை அடித்து நொருக்குவதைப் பார்த்து ஆகா என்றார்கள்.

அவர்கள் எவருக்கும் எதிர்காலத்தைப் பற்றிய கவலை இருக்கவில்லை. தாங்கள் இருக்கும் சூழலும் வசதிகளும் நிரந்தரமென நினைத்துக் கொண்டார்கள். இவர் நினைக்க வேண்டியவர்களானார்கள்.

மொத்தத்தில் இந்த உல்லாசப் பறவைகளுக்கு தாங்கள் கீழே இறங்க வேண்டி வரும் என்பது மறந்து விட்டது.

—x—x—

www.padippakam.com



www.padippakam.com

# அடுத்த வெளியீடு...

# "ஜனனம்"

நாட்டை நேசிக்கையில்
உரிமையை நாடுகையில்
சுதந்திரத்தை விரும்புகையில்
அடக்குமுறைகள்
அநியாயங்கள் எதிர்க்கையில்
புரட்சி
**ஜனனம்**
ஆகிறது.

படிப்பகம்